LIRNEasia
Pro-poor. Pro-market.
www.lirneasia.net

# நகர MSMEக்களின் உள்ளக வினைத்திறன் மற்றும் வணிக வளர்ச்சி ஆகியவற்றின் மேம்பாட்டை முன்னெடுக்கும் வலைப்பின்னப்பட்ட கருவிகள்

ஊடக வெளியீடு

வலைப்பின்னப்பட்ட கருவிகளை சொந்தமாக வைத்திருத்தல் இலங்கையில் அதிகமாக காணப்படுகின்றது. குறிப்பாக நகரப் பகுதிகளில் இந்த நிலை காணப்படுகின்றது. 2013ம் ஆண்டளவில் 93% ஆன நகர வீடுகளில் சொந்தமாக தொலைபேசி இருந்தது. (HIES, 2012/2013) இன்று இந்த எண்ணிக்கை அதிகமாகி விட்டது. 40% இற்கு அருகிலானநகர சனத்தொகை ஆனது 2015 நடுப்பகுதியில் கணனி அறிவுள்ளதாக காணப்பட்டது. நாட்டில் நுண், சிறு, மற்றும்நடுத்தர நிறுவனங்களின் (MSMEs) எண்ணிக்கை சரியாக அறிய முடியாத பட்சத்திலும், 35%ஆன உழைக்கும் சனத்தொகை ஆனது சுய தொழில் செய்பவர்கள் அல்லது தொழில் தருநர்கள் என அறிக்கையிடப்பட்டது (Labor Force Survey, 2015). தொழில் வாய்ப்பு உற்பத்தி மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றுக்கான MSMEகள் குறிப்பிடத் தகுந்தன.

MSMEகள் மீதான வலைப்பின்னப்பட்ட கருவிகளின் தாக்கம் இன்னும் தெளிவு படுத்தப் படாமல் உள்ளது. வருமானம் குறைந்த அல்லது வருமானம் நடுத்தரமான நாடுகளில் நகர MSMEகளின் உள்ளக வினைத்திறன் மற்றும் வணிக வளர்ச்சி ஆகியவற்றை வலைப்பின்னப்பட்ட கருவிகள் மூலம் விரிவாக்கம் செய்தலின் ஊடாக, வணிகத்திற்குத் தேவையான தகவலை அணுகுதலை மதிப்பிடுவதற்காக விரிவான ஆராய்ச்சியின் முறைமைப்படுத்தப்பட்ட மீளாய்வு ஒன்று நடத்தப்பட்டது.

## கண்டுணரப்பட்ட பிரதான விடயங்கள்

1. உடமை மற்றும் வலைப்பின்னப்பட்ட கருவிகளின் பாவனை ஆனது உள்ளக வினைத்திறனை அதிகரிக்கின்றது. செய்யபட்ட வணிக அழைப்புகளின் உயர் விகிதம், முகாமைத்துவப் பயிற்சிகளால் பெறப்பட்ட சிரந்த அறிவு, அதிகரித்த தொழிலாளர் உற்பத்தி மற்றும் நிறுவன மற்றும் செயற்பாட்டு நடத்தை ஆகியன மேம்பாடு அடைந்தன.
2. பாரிய வணிக வளர்ச்சி, உயர் சந்தைப் பங்கு மற்றும் அதிகரித்த இலாபம் மற்றும் வருமானம் ஆகிய அனைத்தும் வலைப்பின்னப்பட்ட கருவிகளின் பாவனையின் முடிவால் கிடைத்தவை.

## ஆராய்ச்சி

### முறைமைப்படுத்தப்பட்ட மீளாய்வு பற்றி

முறைமைப் படுத்தப்பட்ட மீளாய்வுகள் அடையாளம் காண, தெரிவு செய்ய கடுமையான முறைகளைப் பயன்படுத்துகின்றன. அத்துடன், துல்லியமாக தீர்மானிக்கப்பட்ட ஆய்வுக் கேள்விக்கு தொடர்பான முறைமையான வலுவான சான்றை விமர்சித்து மதிப்பிடுகின்றன. எது இயங்கும் மற்றும் ஏன் என ஒரு பாரபட்சம் இன்றிய ஒரு மதிப்பீட்டினை செய்வதற்கு இவை முயற்சிக்கின்றன.

இந்த முறைமைப்படுத்தப்பட்ட மீளாய்வானது 24,204 கற்கைகளை பரிசோதித்து உள்ளது. அத்துடன் தொகுப்புக்கான அதிக வலுவான எண்ணிக்கை அளவைக் கற்கைகளை அடையாளம் கண்டு உள்ளது. பல கற்கைகள் வலைப்பின்னப்பட்ட கருவியாக கையடக்கத் தொலைபேசியினை கூர் கவனப் படுத்தி உள்ளன.

### உள்ளக வினைத்திறன் மீதான தாக்கங்கள்

ஆபிரிக்காவின் 13 நாடுகளின் 3,691 நுண் தொழில் முனைவோர்களின் ஒரு கருத்துக்கணிப்பு ஆனது உடமைகள் மற்றும் ICTக்களின் பாவனை ஆகியவை எவ்வாறு தொழிலாளர் உற்பத்தித்திறனில் தாக்கம்செலுத்தியுள்ளது என்பதைக் காட்டுகின்றது. ஈ- வர்த்தகம் மற்றும் அதில் தொடர்புபடயதில் கூர் கவனம் செலுத்திய இரு கற்கைகள், ஒரு நிறுவனத்தின் மற்றும் ஒரு வணிகத்தின் செயற்பாட்டு நடத்தையை ஈ - வர்த்தகப்பிரயோகங்கள் எவ்வாறு அதிகரிக்கின்றன என்பதைக் காட்டுகின்றன. தகவல் தொழினுட்பக் கருவிகள் ஊடாக சிறந்த அறிவு முகாமைத்துவப் பயிற்சிகளை உள் வாங்கல் ஆனதும் அவதானிக்கப்பட்டது. ருவாண்டாவில்நடத ஒரு கருத்துக் கணிப்பானது கையடக்கத் தொலைபேசியை சொந்தமாக வைத்திருத்தல் ஆனது உயர் வணிக தொலைபேசி அழைப்புகளுக்கு இட்டுச் செல்கின்றது என்பதையும் அதன் மூலமாக நுண் தொழில் முனைவோரின் வணிக வலையமைப்பு ஆனது, விரிவாக்கம் அடைவதையும் காண்பிக்கின்றது.

### வணிக வளர்ச்சி மீதான தாக்கங்கள்

கென்யா மற்றும் தான்சானியா ஆகிய இடங்களில் உள்ள 100 நுண் தொழில் முனைவோர்கள் தொடர்பான ஒரு கருத்துக் கணிப்பு ஆனது, கையடக்கத்தொலைபேசிப் பாவனை ஆனது சிறு நிறுவன வளர்ச்சியில் பங்கெடுக்கின்றது என்பதை வருமானம், வாடிக்கையாளர் தளம் மற்றும் இலாபம் ஆகியவற்றை அளவைகளாகக் கொண்டு காண்பிக்கின்றன. இந்தியாவில் செய்யப்பட்ட ஒரு கருத்துக் கணிபானது தொலைபேசியை உள்வாங்கல் மற்றும் பொருளாதார நன்மைகளை பிறப்பித்தல் ஆகியவற்றுக்கு இடையே ஒரு நேர இடைவெளியை (மூன்று ஆண்டுகள்) காட்டுகிறது.

இந்தியாவில் செய்யப்பட்ட இன்னொரு கற்கை ஆனது, மும்பை நகரில் உள்ள பெண் சிறு தொழில் முனைவோர்களைப் பற்றியது ஆகும். அது வணிக வளர்ச்சியில் ICTகளுக்கான அணுகலின் மட்டுப்படுத்தப்பட்ட தாக்கத்தைக் காண்பிக்கிறது. நுண் தொழில் முனைவோர்களின் இலாபங்களின் வளர்ச்சி ஆனது நடமாறும் பணத்துடன் இணையாக நிற்கிறது. ஈ - வர்த்தகப் பிரயோகங்கள் உள்ளக வினைத்திறனை மட்டுமே அதிகரிப்பதற்கானவை அல்ல. அது மட்டும் அல்லாது சதைப் பங்கையும் அதிகரிக்க வல்லன.

### தீர்வுகள்

இந்த மீளாய்வு ஆனது வலைப்பின்னற் படுத்தப்பட்ட கருவிகளின் தாக்கத்தை, உள்ளக வினைத்திறன் மற்றும் MSMEக்களின் வணிக வளர்ச்சி ஆகியவை மீதான சாதகமாக செயற்படுத்தப்பட்ட வணிக தகவல் ஊடாக காண்பிக்கிறது. எவ்வாறாயினும், புள்ளிவிபரவியல் ரீதியாக தாக்கங்கள் குறைவாகவே தென்படுகின்றன.

### ஏற்புகள்

வலைப்பின்னற்படுத்தப்பட்ட கருவிகள் ஊடாக வணிகம் தொடர்பான தகவலுக்கான அணுகல் ஆனது, குறைந்த வருமானம் மற்றும் நடுத்தர வருமானம் உள்ள நாடுகளின் நகர்ப் பகுதி MSMEக்களின் வணிக வளர்ச்சி மற்றும் உள்ளக வினைத்திறன் ஆகியவற்றை விரிவாக்கம் செய்கிறதா? எனும் முறைமைப்படுத்தப்பட்ட மீளாய்வானது International Development Research Centre, Ottawa, Canada மற்றும் Department for International Development, UK ஆகிய அமைப்புகளின் மானிய உதவிகளால் மேற்கொள்ளப்பட்டது.

## ஆக்குநர்/கள்

P. விக்னேஸ்வர இளவரசன், PhD, ஆய்வாளர் , LIRNEasia, கொழும்பு, இலங்கை. evignesh@gmail.com

**Computer copies / Softcopies of this document can be requested from LIRNEasia. Email: Suthaharan@lirneasia.net**